செய்தி வெளியீடு எண்: 351 நாள் : 28.06.2013

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், தமிழ்நாடு அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையினால் நடத்தப்படும் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமாகும். தொழிலாளர் மேலாண்மை குறித்த கல்வி வழங்குவதில் தனிச்சிறப்பு பெற்ற நிறுவனமாகும். இங்கு பயின்ற மாணவர்கள் வளாக நேர்காணல் மற்றும் இதர வகையில் அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் மனித வள மேம்பாட்டுத் துறையில் பணிபுரிகிறார்கள்.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தால் நடத்தப்படும் எம்.ஏ (தொழிலாளர் மேலாண்மை) – இரண்டாண்டுகள் முழுநேரப் படிப்பு மற்றும் தொழிலாளர் நிர்வாகவியலில் முதுகலைப் பட்டயப் படிப்பும் (பிஜி.டி.எல்.ஏ) (மாலை நேரப் படிப்பு) ஆகிய படிப்புகளுக்கான விண்ணப்பிக்கும் தேதி, 15.7.2013 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. தற்போது இப்படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. விண்ணப்பங்களை ரூ.200/– செலுத்தியோ அல்லது ரூ.200/– க்கான வங்கி வரைவோலை மற்றும் சுயவிலாசமிட்ட 26 x 20 செ.மீ அளவுள்ள ரூ.35/– க்கான தபால்தலை ஒட்டிய உறையுடன் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், எண்.5, காமராசர் சாலை, (விவேகானந்தர் இல்லம் அருகில்) சென்னை – 5 என்ற முகவரிக்கு அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் என்ற ஓராண்டு – பகுதி நேர பட்டய படிப்பு, அரசின் அனுமதி பெறப்பட்டதும் துவக்கப்படவுள்ளது. இப்படிப்புக்கான வகுப்புகள் சனிக்கிழமைகளில் மாலையிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெறும்.

கல்வி நிலைய தொலைபேசி எண்கள் – 044 – 28440102 / 28445778

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**